(2) உரிமைப் பிரச்சினை.

ஓர் உறுப்பினரின் உரையை தவருக "மக்கள் குரல்" நாளிதழ் வெளியிட்டிருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு சுருளிவேல் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிருர். அதை இப்போது அவர் விளக்குவார்.

திரு. மு. சுருளிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாதம் 22-ம் தேதி இந்த அவையிலே ஆளுநரின் உரையின் மீது பேசுகின்ற நேரத்தில் நான் பேசிய பேச்சை 1974-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23-ம் நாளன்று "மக்கள் குரல்" பத்திரிகை "சட்டசபையில் பிரிவினை கோரிக்கை" என்ற தலைப்பிலே செய்தி வெளியிட்டிருக்கின்றது. நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை, பெரியார் லட்சியத்தை நோக்கி எங்களை அழைத்துச் செல்லுங்கள் என்று பேசியதை, தனித் தமிழ்நாடு கோரிய பெரியார் லட்சியத்தை நோக்கி எங்களை அழைத்துச் செல்லுங்கள் என்று நான் பேசியதாக அந்த பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. பெரியார் அவர்களுடைய லட்சியம், ஜாதி, மத பாகுபாடு ஒழிக்கப்பட வேண்டும் என்பதை தமிழ்நாடும் தமிழ் சமுதாயமும் நன்கு அறியும். தந்தை பெரியாரின் அந்த லட்சியத்தை நோக்கி மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழி நடத்திச் செல்ல வேண்டுமென்று நான் பேசியதை அந்தப் பத்திரிகை என்னுடைய பேச்சுக்கு முரணுக வெளியிட்டிருக்கிறது. இது சட்ட மன்ற உறுப்பினருடைய உரிமையை பாதிக்கின்ற வகையில் இருக்கின்ற காரணத்தாலும், வேண்டுமென்றே, திட்டமிட்டு அந்தச் செய்தி பிரசுரமாகியிருக்கின்ற காரணத்தாலும் இதை உரிமைக் குழுவிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுருளிவேல் அவர்கள் சட்டப் பேரவையில் 1974-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22-ம் நாளன்று ஆற்றிய உரையை 23—1—1974-ஆம் தேதி "மக்கள் குரல்" பத்திரிகையில் தவருக வெளியிட்டிருப்பது பற்றி திரு. சுருளிவேல் அவர்கள் ஒரு அவையுரிமை பிரச்சினை எழுப்பி இருக்கிருர்கள். திரு. சுருளிவேல் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு மக்கள் குரல் பத்திரிகையில் அவரது பேச்சை வெளியிட்டிருக்கும் விதம் இப் பேரவையின் நிகழ்ச்சிகளைத் தவருன முறையில் மாறுபாடாக வெளியிட்டிருப்பதாகத் தான் கருத இடம் தருகிறது. பேரவையின் நிகழ்ச்சிகளைத் திருத்தியோ அல்லது மாறுபாடாக வெளியிடுவதோ அவையுரிமையை மீறிய செயல் என்று பல முறை இம்மன்றத்திலும் மற்ற பாராளுமன்றங்களிலும் கருதப்பட்டு வந்திருக்கிறது. ஆயினும் இதில் ஒரு தீர்மானமான முடிவுக்கு வருவதற்கு முன் பத்திரிகை ஆசிரியருக்கு எழுதி அவரது விளக்கத்தைக் கேட்டு பிறகு தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.